அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## தமிழகத்தின் 3500 ஆண்டுகள் தொன்மையான எஃகு வாள்

கட்டுரை உள்ளே



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜுலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 4 October 2019*
கோட்டை :1 வாயில்:4 அக்டோபர் 2019

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஜயப்பன்
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் *K.*முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


தமிழகத்தின் 3500 ஆண்டுகள் தொன்மையான எஃகு வாள் - ஓர் அறிவியல் பார்வை
முனைவர். இரா. ரமேஷ்

Women Liberation: Reflections of Indian Press on Women in Dravidian and Leftist Movements in Tamilnadu, 1928-1947
Dr.V.Venkatraman, Ph.D., D.Litt.,

குதிரைக்கல் இட்டேரி நடுகல்
முனைவர். போ.கந்தசாமி

வாணியம்பாடி அதிதீஸ்வரர் திருக்கோயில் கல்வெட்டுகள் - ஓர் ஆய்வு
முனைவர் மு.முஜிபுர்ரகுமான

வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென
முனைவர் மு.ஜெகதீசன்

குறிஞ்சிப் பாட்டில் தோழியின் சொல்வன்மை
முனைவர்ப. விமலா அண்ணாதுரை

பேச்சு வழக்கில் தொடரும் இலக்கணமரபுகள்
முனைவர்சு. விமல்ராஜ்

இலக்கியத்தில் சூழலியல் பதிவுகள்
முனைவர். சு. பேச்சியம்மாள்

மனைவி முகத்தில் எழுதி காதலிக்கு அனுப்பிய காதல் தூது - பெருங்கதை ஓர் ஆய்வு
முனைவர் க.லெனின்

கம்பனின் இறைமனிதன்
முனைவர் ல.குமாரி கிருஷ்ணவேணி

# அகத்தினுள்


ஐவர் அம்மானையில் சமுதாயம்
முனைவர் ம.ஷீலா ஸ்ரீநிவாசன்

நடப்பியல் நோக்கில் ஆசாரக்கோவை
முனைவர் கோ. வெங்கடகிருஷ்ணன்

அற நூல்களின் தோற்றப் பின்னணி
முனைவர். மா.லெமூரியா

தமிழ்ச் சமயமரபில் பக்திநெறி
முனைவர் ர.சுரேஷ்

மொழிப்பயன்பாட்டில் திறன்மேம்பாடு
முனைவர் வெ. விஜயலட்சுமி

கறுப்பு வயிறுகளும், வெள்ளை உணவுகளும்
முனைவர். ப.ம.மயிலா

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் சித்தரிப்பு
முனைவர்கி. அய்யப்பன்

உழவுமாடுகள் சிறுகதைத் தொகுப்பில்பெண்களின் பிரச்சனைகள்
முனைவர் த.அமுதா

ஆத்துக்குப் போகனும் நாவலில் பெண்களின் சிக்கல்
முனைவர் பெ.கி.கோவிந்தராஜ்

பௌர்ணமியின் சிறப்பு
முனைவர் கல்பனாதேவி


முகப்பு

தெலுங்கனூர் - புகைப்படம்

முனைவர் ரமேஷ்

# தொல்லியல்

# வாணியம்பாடி அதிதீஸ்வரர் திருக்கோயில் கல்வெட்டுகள் ஓர்ஆய்வு

முனைவர் மு.முஜிபுர்ரகுமான்
உதவிப்பேராசிரியர்
இசுலாமியக் கல்லூரி (தன்னாட்சி)
வாணியம்பாடி-635 752

**ஆய்வுச் சுருக்கம்**

**'வாணியம்பாடிஅதிதீசுவரர் திருக்கோயில் கல்வெட்டுகள்-ஓர்ஆய்வு'**என்றதலைப்பிலான இக்கட்டுரையில் அதிதீசுவரர் திருக்கோயில் வரலாறுஆய்ந்துதரப்பெற்றுள்ளது. இலக்கியத்தில் வாணியம்பாடிமற்றும் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளசெய்திகளையும்,அதிதீசுவரருக்கு இருக்கும் வேறுபெயர்களையும்எடுத்தாளப் பெற்றுள்ளது.மேலும், இக்கோயிலுக்குபேரரசர்கள் சிலதானங்களையும் வழங்கியவரலாறுஆய்வுலகம் அறிந்துகொள்ளவேண்டும் என்றஅடிப்படையில் இக்கட்டுரைஅமைக்கப்பெற்றுள்ளது.

**திறவுச்சொற்கள்**

கோயில்,ஆலங்காயம்,கல்வெட்டுகள்,வானகோப்பாடி,சிந்தகப்பாடி,வாணியம்பாடி, முக்கிபுரி,சிவஸ்தலம்,பூலோககைலாயம்,ஞானபுரி,சதுர்வேதிமங்கலம்,சோறுடையான் கழனி,விருந்தின் நானயனார், குழி,கழஞ்சு,மஞ்சாடி,சந்நதி

**முன்னுரை**

வேலூர் மாவட்டம் வாணியம்பாடிவட்டத்தில் ஆலங்காயம் அமைந்துள்ளது. இவ்வூர் பழமையானவரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இவ்வூரியுள்ளஅருள்மிகுஅதிதீசுவரர்திருக்கோயில் 60 சென்ட்டுநிலப்பரப்பில் மேற்குநோக்கிஅமைந்துள்ளது. அத்தகையசீறும் சிறப்புமாகியஅதிதீசுவரர்திருக்கோயில் கல்வெட்டுகள் குறித்துஆய்வதே இக்கட்டுரையின் இலக்கு.

**தலவரலாறு**

இக்கோயிலின் தலவரலாறுதிருப்பத்தூர் புராணங்கள் என்ற நூலில் வாணிப்புரப்படலம் என்றஅத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது. அதன் படிசத்தியலோகத்தில் பிரம்மனுக்கும்,கலைவாணிக்குமிடையேஏற்பட்டவாக்குவாதத்தின் போதுபிரம்மன் சற்றுகர்வமாகவும் மூர்த்திகளில் நான் தான் உயர்ந்தவன் என்று கூறினார். நான் படைத்தல் தொழில் செய்யாவிடில் ஏனைய இரண்டு மூர்த்திகளானவி'ணுவிற்குகாத்தல் தொழிலும்,சிவனுக்குஅழித்தல் தொழிலும் இல்லை. எனவேநானேசிறந்தவன் என்றார். அதனைக்கேட்டகலைவாணிபிரம்மனுடையதவறானஎண்ணத்தைக் கண்டுஏளனமாகநகைத்தாள். அதைக் கண்டபிரம்மாவிற்குகலைவாணிமீதுகோபம் ஏற்பட்டு'ஊமையாகபோகக் கடவாய்'என்றுசபித்தார்.

குலைவாணிபூலோகம் வந்துபல இடங்களுக்குச் சென்றுகடைசியாகசிறுங்கேரிஎன்ற இடத்தில் ஆரம்பித்துஅவ்வழியேவந்துதற்போதுள்ளவாணியம்பாடியில் பாலாற்றங்கரையின் ஓரமாகஅமர்ந்துஅறச்சாலைஅமைத்துசிவனைநோக்கிதவம் செய்யஆரம்பித்தாள்.

இதற்கிடையேஒருதவறும் செய்யாதவாணியைதண்டித்ததால் பிரம்மாவிற்குபாவம் சூழ்ந்தது. அதனைப் போக்கஅவர் காஞ்சிபுரம் சென்றுஒருயாகம் நடத்தமுனிவர்களைவேண்டினர். ஆனால் அம்முனிவர்களோமனைவியின்றிசெய்யும் யாகம் பூர்த்தியடையாதுஎன்றனர். எனவேபிரம்மன் வி'னுவிடம் சென்றுவாணியைசமாதானப்படுத்தவேண்டினார். வி'ணுவும்

கலைவாணியைசமாதானப்படுத்த இவ்விடத்திற்குவந்தார். ஆனால் வாணியோஒருதவறும் செய்யாததனக்குஏற்பட்டநிலைக்காகவருந்திபிரம்மாவின் யாகத்திற்குவரமறுத்துவிட்டாள். எனவேபிரம்மாசிவனிடம் சென்றுவாணியைசமாதானப்படுத்தும்படிவேண்டினார். சிவன்,வி'ணுவைப் போல் அல்லாமல் வேதியராக (விருந்தினர் வடிவில்) சிவனும்,பார்வதியும் வாணியின் அறச்சாலைக்குவந்தனர். அவர்களுக்குதக்கமரியாதைசெய்துவணங்கியவாணி,குறுத்துப் பிரியாதவாழையிலையில் அறுஞ்சுவைஉணவைப் படைத்துதன் நிலையைஎண்ணிவருந்தினாள். அப்பொழுது,சிவன் வாணியைப் பார்த்து'வாணிஎன்னைநோக்கிப் பாடு'என்றார். உடனேவாணியின் ஊமைத்தன்மைநீங்கிசிவனைநோக்கிப் பாடஆரம்பித்தாள் எனவே இவ்வூருக்கு'வாணிபாடி'என்றபெயர் ஏற்பட்டது. அதுவேபின்புதிரிந்துவாணியம்பாடிஎன்றாயிற்று. இவ்வூருக்குபல்வேறுகாலகட்டங்களில் பல்வேறுபெயர்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கோயில் பலஅரசர்கள் காலத்தில் வளர்ச்சிப் பெற்றுவிஜயநகரஅரசர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டதற்கானசான்றுகள் கிடைத்துள்ளன. இக்கோயிலில் பதினைந்துக்கும் மேற்பட்டகல்வெட்டுகள் காணப்படுகின்றன. கோயிலின் மதில் சுவர்களில் பொதுவாக இக்கோயிலுக்குதானமாகவிடப்பட்டநிலங்கள் (வடக்குப்பட்டு,திருமாஞ்சோலை) மற்றும் அபராதமாகபெறப்பட்டபொருட்கள் ( பசு,எண்ணெய்,பால் போன்றவை) பற்றியகுறிப்புகள் உள்ளன. இக்கோயில் விஜயநகரஅரசர் சதாசிவராயர் (கி.பி.1464) காலத்தில் புதுப்பிக்கப்பட்டதற்கானபட்டயங்கள் காணப்படுகின்றது. இக்கோயில் மிகவும் பழமைவாய்ந்தஒன்றாகும். கோயிலின் சுற்றுச் சுவரில் காணப்படும் கல்வெட்டுகளில் மதுராந்தகசோழமன்னனின் (கி.பி. 970-985) கல்வெட்டுஉள்ளது. அந்தகல்வெட்டுகளில் இவ்வூர் 'மதுராந்தகசதுர்வேதிமங்கலம்'என்றப் பெயரில் உள்ளது.

**பூஜைகளும்,விழாக்களும்**

இக்கோயில் ஒவ்வொருசனிக்கிழமையும் சிறப்புபூஜைகள் நடைபெறுகின்றது. அதுமட்டுமின்றிமார்கழிமாதத்தில் வரும் வைகுண்டஏகாதசிமற்றும் புரட்டாசிமாதத்தில் வரும் சனிக்கிழமைகள் மற்றும் ஒவ்வொருமாதமும் நடைபெறும் சிறப்பு புஜைகளும் சிறப்புமிக்கதாகும். அச்சமயமவாணியம்பாடியும் அதனைச் சுற்றியுள்ளகிராமபகுதியிலிருந்தும் நூற்றுக்கணக்கானபக்தர்கள் தரிசிக்கவருகின்றனர்.

**இக்கோயிலுக்குதானமாககொடுக்கப்பட்டநிலங்கள்**

திருமாஞ்சோலை,ஈச்சங்கால்,கொன்னாம்பட்டிமற்றும் பெரியபேட்டைபோன்ற இடங்களில் இக்கோயிலுக்குவழங்கப்பட்டநிலங்கள் உள்ளன.

இக்கோயில் வாணியம்பாடிநகரில் உள்ளது. சுமார் 1000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது. பல்வேறுவம்சமன்னர்களின் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாகசோழர்களின் கல்வெட்டுகளும்,விஜயநகரமன்னர் சதாசிவராயர் காலத்தில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டதற்கானகல்வெட்டுகளும் வரலாற்றுசான்றுகளாகதிகழ்கின்றன. இக்கோயில் வாணியம்பாடிமக்களின் முயற்சியால் ஆகஸ்டு 2015ல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுகுடமுழுக்குநடைபெற்றது. இந்நகரமக்களின் முக்கியதலமாக இக்கோயில் உள்ளது.

**வாணியம்பாடிஊர்ப்பெயர்**

பாடிஎன்றஊர்ப்பெயர்ச் சொல் திராவிடமொழிகளில் மட்டுமின்றிமற்ற இந்தியமொழிகளிலும் வழக்கத்திலிருக்கின்றது. இம்மொழிகளில் "பாடி"என்றசொல் முல்லை் நிலத்திலுள்ளஊரினையும் சிற்றூர்களையும் குறித்துவந்தது. முல்லைநிலம் மிகுந்தபகுதியில் நாட்டினைக் குறிப்பதற்குப்

பாடிஎன்றசொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாணகோப்பாடிசிந்தகப்பாடிவாணியம்பாடிபோன்றபெயர்களைச் சான்றாகக்கூறலாம். இப்பெயர்கள் அனைத்தும் முல்லைநிலம் மிகுதியாக இருந்தபகுதியல் பயின்றுவருகின்றன.

**வாணியம்பாடி**

நிலக்கடலை,ஆமணக்கு, எள் போன்றவற்றைச் செக்கிலிட்டுஆட்டிஎண்ணெய் எடுக்கும் பிரிவினருக்குவாணியர் என்றுபெயர். நாடாட்டில் இவர்களைத் "தைலித்"எனஅழைக்கின்றனர். வாணியர்கள் பெரும் பகுதிவாழ்ந்தபாடிஎன்பதுமுல்லைநிலத்துஊர்களுக்கானபெயரேவாணியம்பாடியாகும்.

**இலக்கியத்தில் வாணியம்பாடி**

பழங்காலத்தில் வாணியம்பாடிக்குபலபுராணப்பெயர்கள் இருந்துள்ளன. அவைபூலோககைலாயம்,சிவஸ்தலம்,முக்கிபுரி,குருபகவானூர்,ஞானபுரி,சரஸ்வதிபுரம்,வாணியம்பாடிச துர்வேதிமங்கலம் போன்றபெயர்களில் அழைக்கப்பட்டுள்ளன.

**கல்வெட்டில்வாணியம்பாடி**

வாணியம்பாடிக்குப் பெயர் ஜெயங்கொண்டசோழமண்டலத்துப் பெரும்பாணப்பாடிஜம்புழுகூர் நாட்டுமதுராந்தகசதுர்வேதிமங்கலமானவாணியன்பாடிஎன்றுகல்வெட்டுக்களில் காணப்படுகிறது. வாணியம்பாடியில்வரலாற்றுச் சிறப்புமிக்ககோயில்கள்பலஉ ள்ளன. வாணியம்பாடிஅதிதீசுவரன் கோயில்கட்டிடம் திராவிடக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. வாணியம்பாடியில் இந்துக்கள், இஸ்லாமியர்கள்,கிருத்துவர்கள் ஆகியோர் ஒற்றுமையுடன் வாழ்ந்துவருகின்றனர்.

**கல்வெட்டில் காணப்படுபவர்கள்**

மன்றாடிச்சி,சேரநாராயணகிரமவித்தன்,அம்மொழிதேவன்,பள்ளிகொண்டான், சூத்தன்,பூமிதேவன்,அபலத்தரையன் செம்பியன் சோறுடையான் கழனி,கடமுழான்வாழ ஜெயங்கொண்டான்,வீரசாணிஅம்மயப்பன் நுளம்பராயன் கங்காணன்,வாணியன் நம்பி,மாபோதியராயன்ஆகியோராகும்.

**கல்வெட்டில் காணப்படும் ஊர்கள்**

வாணியம்பாடி,ஜம்புமுசூர்,ஏற்றூர்,நர்சிங்க,சதுரவேதிமங்கலமானவாணியம்பாடி,சிற்றாமூர்,செம் பாடு,அரும்பாக்கம்,அத்திப்பாக்கம்,நெற்குன்றம் என்பன.

**அதிதீசுவரரின்வேறுபெயர்கள்**

விருந்தின் தேவர்,விருந்தின் பெருமான் அடிகள்,விடுகாதிகியஈஸ்வரர்,விருந்தினநாயனார்.

கல்வெட்டில் பொன் நாணயங்கள் பற்றியகுறிப்புகளும் இடம்பெற்றுள்ளன.

**கல்வெட்டுக்கள் கூறும் அளவைமுறைகள்**

500 குழி, 1000 குழி நிலஅளவுகள், 6 கழஞ்சு,மஞ்சாடிபோன்றன.

**கல்வெட்டுச் செய்திகள்**

அதிதீசுவரர் கோயிலின் அர்த்தமண்டபவாயில் நிலைக்கால்களில் உ ள்ளகல்வெட்டில்வீரபாண்டியன் தலைகொண்டபார்த்திவேந்தராதிவர்மனின் 8-வது ஆட்சியாண்டுஎன்றுஎழுதப்பட்டுள்ளது.படுவூர்க் கோட்டத்துஅடையாறுநாட்டுநரசிங்கசதுர்வேதிமங்கலமானவாணியம்பாடிசபையார் ஓதிதரையன்என்பருக்குவரிவிலக்குஅளித்து நில விற்பனைசெய்துகுறிப்பிட்டதொகையைவாணியம்பாடிசபையார் பெற்றுகொண்டதாகச் செய்திகள் காணப்படுகின்றன.

இலங்கைநாட்டுகாமுண்டன் ஆன அருமொழித்தேவன் புளியன் என்பவன் வாணியம்பாடிவிருந்தினதேவருக்குநந்தாவிளக்குளிக்க 96 ஆடுகளைத் தானமாகவழங்கியுள்ளதையும்தைசிவபிராமணர்கள் பராமரிக்கவும் ஆணையிட்டுள்ளார்.

இக்கோயிலில் ஒருநந்தாவிளக்குளிப்பதற்காகச் சூரியன் பெற்றான் தனதுதுணைவன் சோறுடையான் கழனிஎன்பவன் 96 ஆடுகள் தானமாகவழங்கியுள்ளார்.

இக்கோயிலின் உள் மண்டபத்தில் உள்ள தூண் ஒன்றைதூணைக் கருமாணிக்கிழவன் ஆகியவாணியநம்பிஎன்பவனின் மனைவிதானமாகச் செய்துள்ளார். மற்றொரு தூணைஅத்திப்பாக்கம் ஊரைச் சேர்ந்த இரண்டுபேர்கள் தானமாகஅளித்துள்ளனர்.

ஒரு தூணைநெற்குன்றத்தைச் சேர்ந்தவாணியன் சீறாளன் மகன் மூன்றுகழஞ்சுபொன் கொடுத்து இத்தூணைக் கொடையாகஅளித்துள்ளார்.

நரசிங்கசதுர்வேதிமங்கலமானவாணியம்பாடிசபையார் ஓதித்தரையன் என்பவருக்குநிலம் விற்பனைசெய்துஅதனைப் பதிவுசெய்துள்ளனர்.மேலும்,அந்நிலத்தைவிலைக்குவாங்கிகுறிப்பிட்டதொகையைப் பெற்றுக்கொண்டுவரிவிலக்குஅளிக்கப்பட்டுஅதனையும் பதிவுசெய்துள்ளனர்.

விருந்தினதேவருக்குநிகழ்த்துவதற்கும் இரண்டுநந்தாவிளக்குகள்தானமாகவழங்கப்பட்டுள்ளன. வீராசானிஅம்மையப்பன் என்பவன் அழகியசோழநல்லூரைவரிவிலக்குச் செய்துதானமாகக் கொடுத்துள்ளார்.

சிற்றாமூர் என்றஊரைச் சேர்ந்தநந்திராயன் ஆன பள்ளிகொண்டான் கூத்தன் என்பவன் வாணியம்பாடிசபையாரிடம் பாலாற்றின் தென் கரையின் நிலங்கள் வாங்கிகொடைகொடுத்துஅந்நிலவருவாயைக் கொண்டுதர்மங்கள் நடத்தஏற்பாடுகள் செய்துள்ளான். ஆவை,“விண்ணாளத்திருவோலக்கம்”என்றநிகழ்ச்சியின் போது இறைவனுக்குமலர்களால் பந்தல் அமைத்ததை இச்செய்தியும் விளக்குகளுக்குஎண்ணெய் வழங்கியதைப் பற்றியும் மேலும், இறைவனுக்குத் திருவமுதுபடைத்தல் பற்றியும் குறிப்பிடுகின்றது.

இக்கோயிலுக்குஒருநந்தாவிளக்குளிப்பதற்குவாழைப்பந்தலைச் சேர்ந்தகண்ணந்தன் விருந்தினதேவர் மகன் பூமிதேவன் என்பவன் 96 ஆடுகளைத்தானமாகவழங்கியுள்ளான். இதனைப் பெற்றுக்கொண்டசிவபிராமணர்கள் விளக்குளிக்கஒப்புக் கொண்டுள்ளனர்.

நுளம்பராயன் என்பவன் அடிமுதல் ஸ்தூபிமடியகோயில் எழுப்பியுள்ளான். அவன் 10 பசுக்களும் ஒருஎருதும் கொடுத்துசிவபிராமணர்களுக்குவிடுகாதழகியஈஸ்வரம் உடையார்க்கு மூன்றுநந்தாவிளக்குகள் எரிக்கவும் செய்துள்ளார். மேலும்,சிவபிராமணர்கள் ஊராண்டைமகன் கூத்தாடும் பிள்ளையாரிடம் 1.5 பொன் பெற்றுக்கொண்டுவிருந்தினதேவருக்குநந்தாவிளக்குளிக்கஒப்புக் கொண்டதாகச் செய்தி கூறுகின்றது.

இராமதென்னாயக்கன் என்பவன் விருந்தின் நாயனார் கோயிலுக்குத் திருநாமத்துக் காணிநிலங்களும் தேவதானநிலங்களும் சர்வமானியமாகவரிவிலக்குசெய்யப்பட்டுபல்வேறுவழிபாடுகளுக்கத் தானமாகவழங்கப்பட்டுள்ளது. மேலும், இக்கல்வெட்டில் வாணியம்பாடிபடுவூர்க் கோட்டத்துஜம்புழுகூர் நாட்டுமதுராந்தகசதுர்வேதிமங்கலமானவாணியம்பாடிஎன்றுஅழைக்கப்பட்டுள்ளது.

**கல்வெட்டிலுள்ளபேரரசுகளின் வரலாறும் அவர்கள் காலத்தியசெய்திகளும்**

**பார்த்திவேந்திவர்மன்**

இவர் சிறந்தநிர்வாகியாகவும் போர் வீரராகவும் திகழ்ந்தார். போர் மூலம் தன் ஆட்சிஎல்லையைவிரிவுபடுத்திமக்களுக்குச் சிறந்தசீர்திருத்தங்களச் செய்தார். இவரதுஎட்டாவதுஆட்சியாண்டில் நிலத்திற்குவரிவிலக்குச் செய்துஅதனைவிற்பனைசெய்துஅந்தத் தொகையைவாணியம்பாடிசபையாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வீரராசேந்திரசோழன் (கி.பி 1064 –1070) இவர் தனதுஆட்சிகாலத்தில் இவர் வீரசோழியம் என்ற நூல் இயற்றப்பட்டது. பாண்டியநாடு,சோழநாடு,கங்கைநாடு,தொண்டைநாடுபொன்றநாடுகளில் உள்ளநிலங்களைசுமார் 4000 பிராமணர்களுக்குப் பகிர்ந்தளித்துவிவசாயவளத்தைபெருக்கினர். இவர் காலத்தில் கோயிலிலுள்ளநடராசருக்குநந்தாவிளக்குளிக்கவும்ஏற்பாடுசெய்துள்ளார்.

விக்கரமசோழன் (கி.பி. 1120-1136) ஆட்சிகாலத்தில் சிதம்பரம் நடராசர் கோயிலுக்குப் பல தானங்கள் வழங்கப்பட்டுள்ளன. விருந்தினதேவர் கோயிலுக்குப் பலகொடைகளைஅளித்துள்ளனர்.போசளஅரசர் விஸ்வநாதர் ஆட்சிகாலத்தில் தொண்டநாயக்கன் என்பவன் விருந்தினநாயனார்க் கோயிலுக்குத் திருநாமத்துக் காணியாகநிலங்களும் தேவதானநிலங்களும் சர்வமானியமாகவரிவிலக்குஅளித்துகொடையாகஅளித்தச் செய்திதெரிவிக்கின்றது.

**வாணியம்பாடியில் உள்ளபிறகோயில்கள்**

**அருள்மிகுபெருமாள் கோயில்**

வாணியம்பாடி இரயில் நிலையத்திலிருந்துமேற்கே 3 கி.மீட்டர் தொலைவில் பெரியப்பேட்டைஎன்ற இடத்தில் மேற்குநோக்கியவாறுபெருமாள் கோயில் அமைந்துள்ளது. இதுபாலாற்றாங்கரையின் கிழக்குப் பகுதியில்உள்ளது. இக்கோயிலின் நுழைவுவாயில்விசாலமாகவும் நீண்டும் காணப்படுகிறது. அலமன்,அழகுப் பெருமாளைநோக்கியுள்ளார். கருவறையில் அழகுப் பெருமாள் சுமார் 8 அடி உயரத்தில் நின்றகோலத்தில் காட்சியளிக்கின்றார்.

**அருமிகுசுந்தரவல்லிதாயார் சந்நிதி**

பெருமாளைநோக்கியபடிகிழக்குமுகமாகசுந்தரவல்லிதாயார் காட்சிதருகிறார். மேல் கைகளில் மலர்கள் இருக்ககீழ்க் கைகளில் அபயவரதமுத்திரைகள் காணப்படுகின்றன.

**அருள்மிகு இலட்சுமிநாராயணன் சந்ததி**

வைணவத் திருத்தலங்களில் 108-வது திருத்தலமாகவிளங்குகிறது. கருவறையில் ஆதிசே'ன் கடைவிரிக்க இலட்சுமிமடியின் மீதுதலைவைத்துக் கொண்டுபாம்பின்மேல் அமர்ந்துசங்குச் சக்கரம் ஏந்தியநான்குகைகளுடன் காட்சியளிக்கிறார்.

இக்கோயிலின் இராசகோபுரம் முதல் நிலையிலேயேநின்றுவிட்டது. இக்கோயில்உட்பிரகாரமும்வெளிப்பிரகாரமும் உள்ளன. இக்கோயிலின் கட்டிடக்கலையமைப்புவிசயநகர் காலத்தியது. இங்குள்ள தூண்கள்,கல்வெட்டுகள்,சிற்பங்கள் ஆகியவைவிசயநகரஆட்சிக் காலத்தைச் சேர்ந்தவை. ஆனைத்து தூண்களிலும் வி'ணுவின் பத்துஅவதாரங்கள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் வைகாசனஆகமமுறைகளில் பூசைகள் இரண்டுகாலங்களில் நடைபெறுகின்றன. இக்கோயில் வடகலைப் பிரிவினரைச் சார்ந்தது.

**பொன்னியம்மன் கோயில்**

பொன்னியம்மன் திருக்கோயில் வாணியம்பாடி இரயில் நிலையத்திலிருந்துவடமேற்கில் சுமார் 2. கிலோமீட்டர் தொலைவில் நகரின் நடுவில் அமைந்திருக்கிறது. 5.செண்டுநிலப்பரப்பில் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இவ்வூர்பாலாற்றங்கரையில் கீழ்ப் பக்கத்தில் இருக்கிறது.வெளிமண்டபத்தின் முன்புறம் மாரியம்மன் சந்நதியும்,விநாயகர் சந்நதியும் உள்ளன.

நாள்தோறும் ஒருகாலபூசைநடைபெறுகிறது. இக்கோயில் இந்துசமயஅறநிலையஆட்சித் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது.

**முடிவுரை**

இவ்வளவுசிறப்புகளையும் பெருமைகளையும் கொண்டவாணியம்பாடிஅதிதீசுவரர் கோயில் தற்பொதுகலைமற்றும் பண்பாட்டுநிகழ்ச்சிகள் வாணியம்பாடிநகரமக்களால் பின்பற்றப்பட்டுதிராவிடமற்றும் ஆரியபண்பாட்டைஒருங்கிணைந்தவாறுசமயப் பண்பாடுகளுடன் சிறந்துவிளங்குகிறது. இக்கோயில் தமிழகஅரசின் இந்துசமயஅறநிலைஆட்சித்துறையின் கீழ் உள்ளது. கோயில் விழாக் காலச் சிறப்புபூஜைகள் மற்றம் கோயில் பராமரிப்புதமிழகஅரசின் மானியத்தாலும் பொதுமக்களாலும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டுவருவதுபாராட்டிற்குரியது.

**துணைநூல்கள்**


1. கலைவாணன் மா. வேலூர் மாவட்டதொல்லியல் கையேடு,கல்வெட்டுக்கள் தொல்லியல் துறை,வேலூா(.2011)
2. அப்பாதுரைகா. தென்னாட்டுபோர்க்களங்கள்,மெய்யப்பன் பதிப்பகம்,சிதம்பரம்.(1961)










29

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2020, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - டிசம்பர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com
✉ aranjournal@gmail.com
✆ 72995 87879